**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

C 8101903

1. District / மாவட்டம்: DVAC    PS / காவல்நிலையம்: V & AC HQRS    Year / ஆண்டு: 2022    FIR No. / மு.த.அ. எண்: 07    Date / நாள்: 26.10.2022

2. (i) Act / சட்டம்: Prevention of Corruption Act 2018 (Amendment)    Sections / பிரிவுகள்: 7 and 7 A
(ii) Act / சட்டம்:    Sections / பிரிவுகள்:
(iii) Act / சட்டம்:    Sections / பிரிவுகள்:
(iv) Other Acts & Sections / பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்    Date from / நாள் முதல்: 19.10.2022    Date to / நாள் வரை:
Time Period / நேர அளவு    Time from / நேரம் முதல்: 1315 hrs    Time to / நேரம் வரை: 2130 hr
(b) Information Received at PS Date / காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள்: 26.10.2022    Time / நேரம்: 1500 hrs
(c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பு பதிவு விவரம் எண்:    Time / நேரம்: 1600 hrs

4. Type of Information Written/ Oral / தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: 26.10.2022 written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து வேண்டிய தூரமும் திசையும்: 17 Km North west
Beat Number / ரோந்து சுற்று எண்:    (b) Address / முகவரி: Office of Regional Administrative Medical Officer (ESI) perambur chennai-12.

(c) In case outside limit of this Police Station, then the Name of P S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல்நிலையம்    District / மாவட்டம்:

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: K. Yuvaraj    (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: Kanagaraj
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு:    (d) Nationality / நாட்டினம்:    (e) Passport No / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
Date of Issue / வழங்கப்பட்ட நாள்:    Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
(f) Occupation / தொழில்: Deputy Superintendent of police    (g) Address / முகவரி: Special Investigation Cell, NO. 293, M.K.N. Road Alandur, chennai-16.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்): 1. Dr. P. Thirunavukkarasu MBBS D.ortho, Regional Administrative Medical Officer (ESI) perambur, chennai-12. 2) Thiru. D. Bhavani s/o Dass, proprietor Sri Mahaveer pharma distributor, no 11th Avenue Ashok nagar chennai-83 3) Thiru P. Srinivasan s/o Pakkai Assistant vice president Tablets india Ltd Thondaiyarpet Chennai-21. 4) Thiru S. Suresh S/o Sekar Deputy divisional manager Tablets India Limited Thondaiyarpet, Chennai-21.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவர் குறைவிடத்தில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)
(1) Unaccounted Cash Rs 6,63,000/-
(2) 11 Sovereigns gold Strips [2 gms gold Strips - 14 nos
4 gms gold Strips - 15 nos]

10. Total value of properties stolen / involved
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சாரம் (தேவைப்படின் தனித்தாளில் இணைக்கவும்)

FIR content is enclosed in Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................. Rank .................. to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................................. on point of jurisdiction.

[illegible]

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

[illegible]

14. Signature / Thumb impression of the Complainant / Informant
புகார்தாரர் / தகவல் கொடுப்பவரின் கையொப்பம் /
பெருவிரல் ரேகை பதிவு
26/10/2022

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கையொப்பம்
26/10/2022

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
26.10.2022 at 1600hrs

Name பெயர் K. Yuvaraj
Rank நிலை .................. No. ......
DSP - SIC, Vd AC
Chennai.16.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண் 07/2022 u/s 7 and 7A of Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 ன் தொடர்ச்சி பின்வருமாறு

சென்னை - 12, பெரம்பூர் என்ற இடத்தில் இயங்கிவரும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (ESI) அலுவலகத்தில் 19.10.2022 அன்று அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை தொடர்பாக தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை / கைப்பற்றுதல் மகஜர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய உயர் அதிகாரியிடம் ஒப்புதல் பெற்று இன்று 26.10.2022 தேதி மதியம் 15.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை / கைப்பற்றுதல் மகஜர் பின்வருமாறு.

<u>திடீர் சோதனை / கைப்பற்றுதல் மகஜர்</u>

| | |
|---|---|
| சோதனை நடைபெறும் அலுவலகம் | மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் ( தொ.அ)<br>அலுவலகம்,<br>பெரம்பூர்<br>சென்னை - 12. |
| சோதனை நடைபெறும்போது உடனிருந்த சாட்சிகள் | (1) திரு.T M தீன் முகம்மது, வயது 45<br>த/பெ. முகம்மது அலியார்,<br>கண்காணிப்பாளர்,<br>வட்டார போக்குவரத்து அலுவலகம்,<br>மீனம்பாக்கம், ஆலந்தூர்,<br>சென்னை - 16.<br><br>(2) திரு.N K.வெங்கடாசலபதி, வயது 34<br>த/பெ. குப்புசாமி<br>கணக்கர்,<br>வட்டார போக்குவரத்து அலுவலகம்,<br>மீனம்பாக்கம், ஆலந்தூர்,<br>சென்னை - 16. |

| | |
|---|---|
| சோதனை மேற்கொள்ளும் காவல் அலுவலர் | திரு K யுவராஜ்,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16.<br><br>திரு N ரவிகுமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16.<br><br>திருமதி K S அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

சென்னை பெரம்பூரில் உள்ள மண்டல நிர்வாக அலுவலர் (தொஅஈ) அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மேற்கண்ட அலுவலகத்தில் மருந்துகள் தயாரிக்கும் நிறுவனத்தின் தொடர்பு அலுவலர்களிடம் (Liasioner) இருந்து கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் எனது அலுவலகத்திற்கு கிடைத்தது. மேற்படி தகவலை இன்று 19.10.2022 காலை சுமார் 10.00 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததின் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

2) மேலும் திடீர் சோதனைக்கு இரண்டு சாட்சிகளை அனுப்பி வைக்க வேண்டி வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மீனம்பாக்கம் அவர்களிடம் தொலைபேசி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் தகவல் தெரிவித்ததின்

பேரில் மேற்கண்ட இரண்டு சாட்சிகளும் இன்று 19.10.2022ந் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் ஓட்டேரி காவல்நிலையம் அருகில் வந்திருந்தனர். அங்கு காத்திருந்த நான் மற்றும் காவல் ஆளிநர்களுடன் மேற்சொன்ன சாட்சிகளை அடையாளம் கண்டுகொண்டு அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்து தகவலை தெரிவித்து சென்னை, பெரம்பூரில் அமைந்த மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (ESI) அலுவலகத்தில் சோதனை செய்ய உள்ள விவரத்தை தெரிவித்தோம். மேற்படி இரண்டு சாட்சிகளும் சோதனையின் போது சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டு அவர்களுக்கு மீனம்பாக்கம் வட்டார போக்குவரத்து அலுவலர் அளித்த நியமன உத்தரவை காண்பித்தனர். அதை தொடர்ந்து இன்று (19.10.2022) மதியம் சுமார் 1.15 மணியளவில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (ESI) அலுவலகத்தில் கொரோனா நடவடிக்கை பின்பற்றி சோதனை தொடங்கப்பட்டது.

3) மேற்படி அலுவலகத்தில் அரசு சாட்சிகள் முன்னிலையில் உள்ளே நுழைந்தும் மூன்று நபர் படிகட்டுகள் வழியாக இறங்கி வந்து கொண்டு இருந்தார்கள். அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்தும், அடையாள அட்டையை காண்பித்தும், அவர்களை பற்றி விசாரணை செய்யப்பட்டது. அவர்களில் ஒரு நபர் தனது பெயர் P.சீனிவாசன் என்றும் தனது தந்தை பெயர் பிச்சை என்றும் தான் நெ.9A, சாலமாபைன் ரிட்ஜ், இன்னர் ரிங் ரோடு, வேளச்சேரி, சென்னை -41 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், சென்னை - 81 தண்டையார்பேட்டை, D.K ரோடு, நெ.179 என்ற முகவரியில் அமைந்த Tablets India Ltd என்ற நிறுவனத்தில் Assistant Vice President ஆக பணிபுரிந்து வருவதாக கூறினார்.

4) அதை தொடர்ந்து மற்றொரு நபர் தனது பெயர் D.தரணி என்றும் தனது தந்தை பெயர் தாஸ் என்றும், தான் நெ.D/9, 6th மெயின் ரோடு, முகப்பேரு, சென்னை-37 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், சென்னை-83, அசோக்நகர், 11th அவென்யு என்ற முகவரியில் Sri Mahaveer Pharma Distributor என்ற பெயரில் அலுவலகம் நடத்தி வருவதாகவும், இந்த அலுவலகத்தின் Proprietor என்றும் கூறினார். அதை தொடர்ந்து மற்றொரு நபர் தனது பெயர் S.சுரேஷ் என்றும் தனது தந்தை பெயர் சேகர் என்றும், தான்

நெ.1&2 Raja Appartments, 14th Street நெற்குன்றம், சென்னை-107 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், மேற்படி Tablets India Ltd என்ற நிறுவனத்தில் Deputy Divisional Manager ஆக பணிபுரிந்து வருவதாக கூறினார்.

5) மேலும் மூவரும் TN 09 CS 6989 Innova Ash நிற மேற்படி Sri Mahaveer Pharma Distributor என்ற நிறுவனத்துக்கு சொந்தமான திருதாணி என்பவருடைய காரில் இவ்வலுவலகத்தில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (ESI) அலுவலகராக பணிபுரியும் டாக்டர் P திருநாவுக்கரசு, MBBS, D.(Ortho) அவர்களை சந்தித்து தீபாவளி வருவதை முன்னிட்டு மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்து இனிப்பு வழங்க வந்ததாக தெரிவித்தனர். அவர்களிடம் மேற்படி அவர்கள் மண்டல நிர்வாக அலுவலர் (ESI) அலுவலகத்தை அடையாளம் காட்டினர். இந்த அலுவலகமானது நுழைவுவாயில் வழியாக உள்ளே வந்து படிகட்டு வழியாக உள்ளே வந்து முதல் தளத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வலது புறம் மேற்கு நோக்கி இரண்டு வாசல்களுடன் காணப்பட்டது. முதல் வாசலில் வெளியே கதவின் மேலே Dr P THIRUNAVUKARASU, MBBS, D.ORTHO, REGIONAL ADMINISTRATIVE MEDICAL OFFICER – CHENNAI (ESI) என்ற பிளைவுட்டினால் ஆன போர்டு காணப்பட்டது. மேற்படி நபர்களுடன் அரசு சாட்சிகள் சகிதம் உள்ளே நுழைந்தும் மேற்கு நோக்கி ஒரு நபர் இருக்கையில் அமர்ந்திருந்தார். மேற்படி மூன்று நபர்களும் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை Dr.P திருநாவுக்கரசு என்று அரசு சாட்சிகள் முன்னிலையில் அடையாளம் காட்டினார்கள். மேலும் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் எங்களை அறிமுகம் செய்தும், சோதனை செய்ய வந்த விபரத்தை தெரிவித்தும் சோதனை குழுவினரின் அடையாள அட்டை காண்பிக்கப்பட்டது. மேலும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (ESI) Dr P திருநாவுக்கரசு தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

6) இதனை தொடர்ந்து அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி Dr P திருநாவுக்கரசு அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க அவர் தனது பர்சில்

இருந்து ரூ.4,820/- (RS 500x 8, Rs 200 x 1, Rs 100 x 5, Rs 50 x 2, Rs 10 x 2) தனது எடுத்து ஆஜர் செய்தார். மேலும் இந்த பணம் தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர் அமர்ந்திருந்த மேஜையின் வலதுப்புற டிராயரில் இருந்த வெள்ளைநிற கவர் ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் முன்னிலையில் திறந்து பார்க்க GOLD DREAM, The Golden Memories என்று ஒருபுறமும், Weight : 2 gms, Purity : 999 *Standard weight tolerance +/- 0.010gm என்ற மற்றொரு புறமும் அச்சடிக்கப்பட்ட சிகப்பு நிற அட்டையில் நடுப்பகுதியில் லேமினேட் செய்யப்பட்ட சுமார் 2 கிராம் எடையுள்ள முன்புறம் பூ படமும், பின்புறம் FINE GOLD 999 2 grams என்று பதியப்பட்ட சிறிய தங்க Strip காணப்பட்டது. இந்த தங்க Strip குறித்து மேற்படி திரு.P.திருநாவுக்கரசு அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் Tablets India Ltd என்ற நிறுவனத்தில் Assistant Vice President ஆக பணிபுரியும் திரு.P.சீனிவாசன் அவர்கள் ஸ்வீட் பாக்ஸுடன் சேர்த்து கொடுத்தாக கூறினார். ஆனால் அதற்குரிய சரியான ஆவணங்களோ விளக்கமோ அளிக்கவில்லை எனவே மேற்படி 2 கிராம் தங்க Strip அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறை முழுவதும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது.

7) அதனை தொடர்ந்து அங்கிருந்த மேற்படி மூன்று நபர்களிடமும் அவர்கள் வசம் உள்ள பணம் குறித்து விசாரிக்க மூவரும் தனித்தனியே பர்சில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார்கள். அதில் Sri Mahaveer Pharma Distributor நிறுவனத்தின் உரிமையாளர் திரு.D.தரணி அவர்களிடம் ரூ.11,000/- (Rs.500 x 22) தனியாக மடித்தநிலையிலும், ரூ.4,300/- (Rs 500 x 7, Rs 200 x 3, 100 x 2) தனியாகவும் இருந்தது. இந்த பணம் குறித்து கேட்க ரூ.4,300/- தனது கைசெலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசு சாட்சி முன்னிலையில் ரூ.4,300/-

திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் ரூ.11,000/- பற்றி விளக்கம் கேட்க அதற்குரிய சரியான விளக்கம் அளிக்கவில்லை மற்றும் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே மேற்படி ரூ.11,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) மேலும் Tablets India Ltd நிறுவனத்தில் பணிபுரியும் திரு.P.சீனிவாசன் அவர்களிடம் ரப்பர்பேண்ட் கட்டப்பட்டு ரூ.38,000/- (Rs.500 x 76) தனியாகவும், ரூ.1,400/- (Rs. 500 x 2, Rs. 100 x 4) தனியாகவும் இருந்தது. மேற்படி ரூ.38,000/- குறித்து திரு.P.சீனிவாசன் அவர்களிடம் விளக்கம் கேட்க இந்த பணம் குறித்து சரியான விளக்கமோ ஆவணங்களோ சமர்ப்பிக்கவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.38,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் இருந்த மேற்படி ரூ.1400/- தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் Tablets India Ltd நிறுவனத்தின் Deputy Division Manager ஆக பணிபுரியும் திரு.S.சுரேஷ் அவர்களிடம் மடித்த நிலையில் ரூ.14,000/- (Rs.500 x 28) தனியாகவும், ரூ.900/- (Rs. 500 x 1, Rs. 200 x 2 ) தனியாகவும் இருந்தது. மேற்படி ரூ.14,000/- குறித்து திரு.S.சுரேஷ் அவர்களிடம் விளக்கம் கேட்க இந்த பணம் குறித்து சரியான விளக்கமோ ஆவணங்களோ சமர்ப்பிக்கவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.14,000/- அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் இருந்த மேற்படி ரூ.900/- தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டது.

9) அதன் பின்பு இந்த அறையை தொடர்ந்து கிழக்கு வாசலுடன் அமைந்த மற்றொரு அறை காணப்பட்டது. அந்த அறையும் அதனுடன் இணைந்த Rest Room ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. மேலும் அந்த அறையில் Pink நிறத்தால் ஆன இரும்பு பீரோ ஒன்று பூட்டிய நிலையில் காணப்பட்டது. அந்த பீரோ பற்றி விசாரிக்க Dr.P.திருநாவுக்கரசு அவர்கள் அதை தனது சொந்த உபயோகத்திற்காக வாங்கி

வைத்துள்ளதாகவும், அந்த பீரோவின் சாவி பற்றி மேற்படி Dr P திருநாவுக்கரசு அவர்களிடம் விசாரணை செய்ய தான் பயன்படுத்தும் கறுப்பு நிற கைப்பையில் இருந்து சாவி எடுத்து பீரோவை திறந்து காண்பித்தார். அந்த பீரோவில் காணப்பட்ட சிறிய லாக்கரில் இருந்து ரப்பர் பேண்ட் போட்டு நியூஸ் பேப்பரில் சுற்றப்பட்ட நிலையில ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் கொண்ட 12 பணக்கட்டுகள் காணப்பட்டது. அவற்றை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிபார்க்க ரூ.6,00,000/- (Rs. 500 x 1199, Rs. 100 x 5) காணப்பட்டது. இந்த ரொக்க பணம் ரூ.6,00,000/- குறித்து மேற்படி Dr P திருநாவுக்கரசு அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் அதற்கு கடந்த மூன்று மாதங்களாக இப்பணத்தை மேற்படி பீரோவில் வைத்திருப்பதாக கூறினார். மேலும் அந்த பணத்திற்குரிய சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்காமலும், உரிய காரணங்களுடன் விளக்கம் அளிக்காத காரணத்தினாலும் மேற்படி பணம் ரூ.6,00,000/- விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

10) அதனை தொடர்ந்து மேற்படி இவ்வலுவலகத்தின் வராண்டாவில் நின்று கொண்டிருந்த நபர்களை விசாரணை செய்ய அதில் ஒரு நபர் தனது பெயர் திரு.K.சுரேஷ்குமார் என்றும் தனது தந்தை பெயர் திரு.கலியபெருமாள் என்றும், தான் No.85, 3rd மெயின் ரோடு, சி.ஐ.டி நகர், நந்தனம், சென்னை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், சென்னை, கோயம்பேடு, அய்யப்பன் நகரில் அமைந்த Sivam Remedies Pvt Ltd என்ற நிறுவனத்தின் Area Manager ஆக கடந்த 4 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று இவ்வலுவலகத்தில் Medical Store Officer அவர்களை சந்தித்து எங்கள் நிறுவனத்திற்கு வரவேண்டிய நிலுவை தொகை ரூ.76,07,250/- சம்மந்தமாக வந்ததாக கூறினார். மேலும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை சமர்ப்பித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்க ரூ.570/- ஆஜர் செய்தார். அந்த பணம் தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு

அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டு, அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

11) மேலும் அதனை தொடர்ந்து அங்கு நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.T.மதி என்றும் தனது தந்தை பெயர் திரு.திருஞானம் என்றும், தான் No.9/E, P.E கோயில் தெரு, அயனாவரம், சென்னை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், சென்னை, மதுரவாயில், ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் அமைந்த Astrazeneca Pharma India Ltd என்ற நிறுவனத்தில் Institution Business Manager ஆக கடந்த 13 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று இவ்வலுவலகத்தில் Medical Store Officer திருமதி.மாலதி அவர்களை சந்தித்து எங்கள் நிறுவனத்திற்கு வரவேண்டிய நிலுவை தொகை ரூ.4,71,421/- சம்மந்தமாக வந்ததாக கூறினார். மேலும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை சமர்ப்பித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்க ரூ.320/- (Rs. 100x 3, Rs. 20 x1) ஆஜர் செய்தார். அந்த பணம் தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் எற்று கொள்ளப்பட்டு அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டு அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது. மேலும் அவருடன் வந்திருந்த மேற்படி நிறுவனத்தின் Medical Representative திரு.முகமது பாசில் அவர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்க ரூ.200/- ஆஜர் செய்தார். அந்த பணம் தனது கை செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறிய விளக்கம் எற்று கொள்ளப்பட்டு அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டு அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

12) மேலும் அதனை தொடர்ந்து அங்கு நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.D.பாலுமகேந்திரன் என்றும் தனது தந்தை பெயர் திரு.தண்டபாணி என்றும், தான் No.5, லட்சுமி அம்மன் கோயில் தெரு, கொடுங்கையூர், சென்னை - 118 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் சென்னை, அண்ணாசாலை, US Embassy Building ல் அமைந்த IIFL Securities என்ற நிறுவனத்தின் Relationship

Manager ஆக கடந்த 14 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று இவ்வலுவலகத்தின் Regional Medical Administrative Medical Officer Dr P திருநாவுக்கரசு அவர்களை சந்தித்து Regenix Drugs Ltd ன் Share Certificate Reg Folio No 261 and Certificate No 267 ஐ எங்கள் நிறுவனம் மூலமாக Demat செய்வதற்காக வந்ததாக கூறினார். இந்த ஆவணம் குறித்து Dr P திருநாவுக்கரசு அவர்களிடம் கேட்க இதற்குரிய ஆவணத்தை ஆஜர் செய்தார். அந்த ஆவணத்தின் 6 தாள்கள் நகல் எடுக்கப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக வாங்கப்பட்டது. மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்க ரூ.1040/- (Rs 500x 2, Rs 20 x1, Rs.10 x 2) ஆஜர் செய்தார். அந்த பணம் தனது கை செலவிற்காக கொண்டு வந்தபணம் என்று கூறிய விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டு அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

13) இதனை தொடர்ந்து மேற்படி TN 09 CS 6989 என்ற பதிவெண் கொண்ட Sri Mahaveer Pharma நிறுவனத்திற்கு சொந்தமான காரில் வந்த மேற்படி மூன்று நபர்களை அழைத்து கொண்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி கார் சோதனை செய்யப்பட்டது. அந்த காரின் பின்புறம் டிக்கியில் காணப்பட்ட சுமார் 140 எண்ணிக்கையிலான சுவீட் பாக்ஸ்களும், 10 பெட் கவர்களும் மேற்படி காரின் உரிமையாளர் திரு.தரணி அவர்களால் அடையாளம் காண்பிக்கப்பட்டது. இவை அரசு சாட்சிகளின் முன்னிலையில் குறித்து கொள்ளப்பட்டு அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

14) இதனை தொடர்ந்து மேற்படி காரின் Dash Board ல் காணப்பட்ட GOLD DREAM, The Golden Memories என்று ஒருபுறமும், Weight 2 gms Purity 999 *Standard weight tolerance +/-0.010gm என்று மற்றொரு புறமும் அச்சடிக்கப்பட்ட சிகப்பு நிற அட்டையில் நடுப்பகுதியில் லேமினேட் செய்யப்பட்ட சுமார் 2 கிராம் எடையுள்ள முன்புறம் பூ படமும், பின்புறம் FINE GOLD 999 2 grams என்று பதியப்பட்ட

சிறிய தங்க Strip அட்டைகள் 13 எண்ணிக்கைகள் ஒரு ஜிப்புடைய பாலிதீன் கவரிலும், மேலும் மற்றொரு ஜிப்புடைய பாலீத்தின் கவரில் GOLD DREAM The Golden Memories என்று ஒருபுறமும், Fineness 999 Weight 4 gms "Standard weight tolerance +/-0.010ml என்று மற்றொரு புறமும் அச்சடிக்கப்பட்ட சிகப்பு நிற அட்டையில் நடுப்பகுதியில் லேமினேட் செய்யப்பட்ட சுமார் 4 கிராம் எடையுள்ள முன்புறம் பூ படமும், பின்புறம் FINE GOLD 999 4 GRMS என்று பதியப்பட்ட சிறிய தங்க Strip அட்டைகள் 15 எண்ணிக்கைகள் ஆகியவற்றை VUMMUDI Bangaru Snhari Sons, Panagal Park Chennai – 600017 Tel 24342455 / 24363608 / 09 என்று அச்சிடப்பட்ட துணிப்பையுடன் எடுத்து Tablets India Ltd, Assistant Vice President திரு.சீனிவாசன் அவர்கள் அரசு சாட்சிகள் முன்னிலையில் ஆஜர் செய்தார். இந்த தங்க Strips குறித்து திரு.சீனிவாசன், திரு.தரணி, திரு.சுரேஷ் ஆகிய மூன்று நபர்களிடமும் விளக்கம் கேட்க இவற்றை வாங்கியதற்கான முறையான பில்களோ, ஆவணங்களோ சமர்ப்பிக்கவில்லை. மேலும் மூவரும் அதற்குரிய சரியான விளக்கம் அளிக்கவில்லை. எனவே மேற்படி 2 கிராம் எடையுள்ள 13 தங்க Strips மற்றும் 4 கிராம் எடையுள்ள 15 தங்க Strips ஆகியவைகள் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த 2 கிராம் தங்க Strips ஐ இவ்வலுவலகத்தில் Dr P திருநாவக்கரசு அவர்களிடம் இருந்து கைப்பற்றபட்ட 2 கிராம் தங்க Strips உடன் அரசு சாட்சிகள் முன்னிலையில் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது ஒத்து காணப்பட்டது.

15) மேலும் மேற்படி அலுவலகத்தின் பணிகள் பற்றி Dr P திருநாவுக்கரசு அவர்களிடம் விசாரணை செய்ய அவர் இந்த அலுவலக கட்டுப்பாட்டில் 35 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (Eployees State Insurance Dispensary) மருந்தகங்கள் இயங்கி வருவதாகவும், இந்த அலுவலகம் சென்னை Directorate of Medical and Rural Health Services (ESI) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாகவும், மேற்படி 35 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் பணிபுரியும் அலுவலர்களின் பணி சம்மந்தப்பட்ட அனைத்து

விபரங்கள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மருந்தகங்களுக்கு செல்ல வேண்டிய Insured Patient க்கு வழங்கப்பட வேண்டிய மருந்துகளின் தேவைகளின் பட்டியல் அந்தந்த மருந்தகங்களில் இருந்து பெறப்பட்டு, அந்த பட்டியலை DMS (ESI) தலைமையகத்திற்கு அனுப்பப்படும் என்றும், அந்த மருந்துகள் கொள்முதல் செய்வதற்கான உத்தரவை இயக்குநர் DMS (ESI) அவர்களால் நேரடியாக சம்மந்தப்பட்ட மருந்து நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் என்று கூறினார். மேலும் தான் இவ்வலுவலகத்தில் 2016 முதல் பணிபுரிந்து வருவதாகவும், இந்த அலுவலகத்தில் 32 நபர்கள் பணிபுரிவதாக கூறினார்.

16) இன்று (19.10.2022) இவ்வலுவலகத்தில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களுடன் சேர்த்து 21 நபர்கள் பணியில் இருக்கிறார்கள். இதன் தலைவராக மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் டாக்டர்.திரு.P.திருநாவுக்கரசு MBBS, D.(Ortho) பணிபுரிகிறார். இந்த அலுவலகத்தில் 1.டாக்டர்.திரு.கா.செ.யோகபிரகதீஷ், மத்திய மருந்து கிடங்கு மருத்துவ அலுவலர், 2. திருமதி.க.செல்லம்மாள் இளநிலை நிர்வாக அலுவலர், 3.திருமதி.அ.மாலதி, மத்திய மருந்து கிடங்கு அலுவலர், 4.டாக்டர்.திரு.வெ.இளையமுருகன், முதுநிலை உதவி மருத்துவர் (மாற்று பணி), 5.டாக்டர்.க.ஆர்த்தி நிவேதா, உதவி மருத்துவர் (மாற்றுபணி), 6.திரு.சா.சரவணன், அலுவலக கண்காணிப்பாளர், 7.திருமதி.ரா.க.மஞ்சுளா, அலுவலக கண்காணிப்பாளர், 8.திருமதி.ப.அமிர்தம், தலைமை மருந்தாளுநர், 9.திருமதி.க.மகேஸ்வரி, மருந்தாளுநர், 10.திருமதி.க.செல்வராணி, உதவியாளர், 11.திரு.க.கணேஷ், உதவியாளர், 12.திருமதி.க.சுஜாதா, உதவியாளர், 13.திரு.ஆ.அசோகன், உதவியாளர், 14.திருமதி.தே.சசிலா, சுருக்கெழுத்து தட்டச்சர், 15.திரு.தி.பிரிதிவிராஜன், இளநிலை உதவியாளர், 16.திரு.செ.வெங்கடேசன், ஓட்டுநர், 17.திரு.சா.ரமேஷ், ஓட்டுநர், 18. எம்.எஸ்.அப்துல் ரஹிம், பதிவறு உதவியாளர், 18.திரு.பா.முனிரத்தினம், கட்டுநர்,

19.திரு.கு.விக்னேஷ். அலுவலக உதவியாளர், 20.திரு.நி.சுதாகர். மருத்துவமனை பணியாளர் ஆகியோர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

17) இந்த அலுவலகத்தின் தொடர்ந்து சோதனை செய்யும்பொழுது முதல் தளத்தில் வலதுபுறம் திரும்பியவுடன் கடைசியில் கீழே செல்வதற்கும் மற்றும் மொட்டைமாடிக்கு செல்வதற்கு படிக்கட்டுகள் அமைந்துள்ளது. படிக்கட்டுகளுக்கு இடதுபுறம் அறை காணப்படுகிறது. அந்த அறையில் டாக்டர்கள் சம்மந்தப்பட்ட Reimbursement Bill களில் உள்ள தவறுகளை டாக்டர்கள் சரிசெய்து மீண்டும் சம்மந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்பி வைப்பார்கள் இப்பணியை செய்வதற்கு கீழ்கண்ட இரண்டு மருத்துவர்கள் இருந்தார்கள் திரு.இளைய முருகன் Senior Assistant Surgeon, Rs 525/- (500X1, 10X1, 5X3) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மற்றும் திருமதி.S.ஆர்த்தி நிவேதா Assistant Surgeon, Rs.2570/- (500X5, 50X1, 20X1) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். இந்த அறைக்கு இடதுபுறம் இரண்டு கழிவறைகள் உள்ளது. அதைத்தொடர்ந்து இளநிலை நிர்வாக அலுவலர் அறை உள்ளது. அதில் திருமதி.G.செல்லம்மா, இளநிலை அலுவலர் இருந்தார். அவர் தன்னுடைய Hand Bag லிருந்து Rs 1570/- (500X2, 50X10, 20X2, 10X3) எடுத்து ஆஜர் செய்தார். இந்த அறையை தொடர்ந்து Establisment பிரிவு அமைந்துள்ளது. அந்த அறையில் பணியில் இருந்த திரு.சரவணன் மேற்பார்வையாளர் Rs 840/- (500X1, 100X2, 50X1, 20X4, 10X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார், மற்றும் திரு.கே.கிருஷ்ண பிரகாஷ், E-1 உதவியாளர், Rs 230/- (100X1, 20X3, 10X7) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திருமதி.செல்வராணி, E-2 உதவியாளர், Rs 510/- (500X1, 10X1) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திருமதி.சுஜாதா E-3 உதவியாளர், Rs 550/- (500X1, 50X1) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.அசோகன் E-4 உதவியாளர், மற்றும் Rs 450/- (100X3, 50X2, 20X1, 10X3) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.கோபிநாத் E-4 உதவியாளர், Rs 530/- (200X1, 100X3,

20X1, 10X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திருமதி.சசிவா டைபிஸ்ட் Rs 510/- (200X2, 100X1, 10X1) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். ஆகியோர்கள் இருந்தார்கள். அதைத்தொடர்ந்து பூட்டிய நிலையில் Store Room உள்ளது. மேற்கண்ட அறைகளுக்கு எதிர்புறத்தில் பெரிய Hall அமைந்துள்ளது. அதன் நடுப்பகுதியில் 6 டேபிள் மற்றும் 6 நாற்காலிகள் காணப்பட்டது. மேற்கண்ட Establisment பிரிவை சேர்ந்தவர்கள் அமர்ந்து வேலை செய்து வருகிறார்கள். மேலும் இரண்டு இரும்பு பீரோ மற்றும் மர பீரோ காணப்பட்டது. மேலும் மேற்கண்ட பணியாளர்களிடம் தாங்கள் வைத்திருந்த பணத்தைப்பற்றி கேட்டதற்கு தங்களுடைய செலவுக்காக வைத்துள்ள சொந்த பணம் என்று தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு அவரவர் பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

18) மேலும் இந்த Hall தொடர்ந்து வலது புறம் வராண்டா காணப்பட்டது. இதைத் தொடர்ந்து வராண்டாவுக்கு வலது புற கடைசியில் Conference Hall பூட்டிய நிலையில் உள்ளது. அதைத் தொடர்ந்து இடதுபுறம் Accounts Room உள்ளது. அதில் கீழ்கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தார்கள். திரு.கணேசன் உதவியாளர், Rs 310/- (100X3, 10X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.ராஜா மாருதி, இளநிலை உதவியாளர், Rs 2710/- (500X5, 100X1, 50X1, 20X20, 10X2) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.கார்த்திக் ராஜா, இளநிலை உதவியாளர், Rs 25/- (10X2, 5X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேற்கண்ட அறையை தொடர்ந்து பண்டக பிரிவு அறை அமைந்துள்ளது. அதில் திருமதி.மஞ்சுளா, மேற்பார்வையாளர், Rs.1530/- (500X2, 200X1, 100X1, 50X3, 20X4) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.முரளிகிருஷ்ணன், உதவியாளர், Rs 970/- (500X1, 100X3, 50X1, 20X5, 10X2) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். பிரித்திவிராஜ், இளநிலை உதவியாளர், Rs 500/- (500X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.பிரபாகர் துரை, இளநிலை Rs 610/- (200X2, 100X2, 10X1) தனது மணிபர்ஸிலிருந்து

எடுத்து ஆஜர் செய்தார். உதவியாளர் திரு.கணேசன் இளநிலை உதவியாளர். Rs 100/- (50X1, 20X2, 5X2) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேலும் திரு.செல்வராஜ் இளநிலை உதவியாளர், மற்றும் திரு.ஸ்ரீபுவனேஸ்வரி Hospital Worker Rs 460/- (100X3, 50X3, 10X1) தனது Hand Bag லிருந்து எடுத்து ஆஜர் செய்தார்.

19) இந்த அறையை தொடர்ந்து இடது புறம் அஞ்சல் வருகை மற்றும் அனுப்புகை பிரிவு அறை அமைந்துள்ளது அதில் திரு.அப்துல் ரஹ்மான், பதிவறை உதவியாளர், Rs.190/- (50X3, 20X2) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.விக்னேஷ் அலுவலக உதவியாளர், Rs 1255/- (500X2, 200X1, 50X1, 5X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். திரு.சுதாகர், Hospital Worker Rs 1810/- (500X3, 50X4, 20X5, 10X1) தனது மணிபர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மேற்கண்ட பணியாளர்களிடம் தாங்கள் வைத்திருந்த பணத்தைப்பற்றி கேட்டதற்கு தங்களுடைய செலவுக்காக வைத்துள்ள சொந்த பணம் என்று தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு அவரவர் பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது

20) மேலும் இந்த அலுவலகத்தில் பார்வையாளர் பதிவேட்டை பார்வையிட மேற்படி நிறுவனங்களில் இருந்து வந்த திரு.சீனிவாசன், திரு.தரணி மற்றும் திரு.சுரேஷ் ஆகியோர்கள் இவ்வலுவலகத்தில் Dr.P.திருநாவுக்கரசு அவர்களை சந்திக்க வந்ததற்கான பதிவுகள் இல்லை எனவே இவ்வலுவலகத்தின் இன்றைய தேதிக்கான பார்வையாளர் பதிவேட்டின் நகல் எடுக்கப்பட்டு Dr.P.திருநாவுக்கரசு அவர்களிடம் கையொப்பம் பெற்று அரசு சாட்சிகள் முன்னிலையில் வாங்கப்பட்டது. மேற்கண்ட அறையை தொடர்ந்து கீழே செல்வதற்கு படிக்கட்டுகள் அமைந்துள்ளது. மேலும் கீழ்தளத்தில் மத்திய மருந்து கிடங்கு உள்ளது.

21 மேலும் இவ்வலுவலகத்திற்குரிய அரசு வாகனம TN 09 G 1935 வெள்ளை நிற TATA Sumo இவ்வாகனத்தின் ஓட்டுநர் திரு.S.ரமேஷ் அவர்களுடன் அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. திரு.S.ரமேஷ் அவர்களிடம் காணப்பட்ட தனது கைசெலவிற்காக வைத்திருந்த ரூ.100 அவரிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கப்பட்டது.

22 இந்த சோதனையின் முடிவில் கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.6,63,000/- மற்றும் 2 கிராம் எடையுள்ள தங்க Strips 14 மற்றும் 4 கிராம் எடையுள்ள தங்க Strips 15 எண்ணிக்கைகள் சேர்த்து மொத்தம் 11 சவரன் தங்க Strips விசாரணைக்காக அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. இந்த கைப்பற்றுதல் மகஜர் இன்று 19.10.2022 மதியம் 1.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 09.30 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது இங்கு பணியில் இருந்த ஒருசில அலுவலர்களை தவிர மற்ற அலுவலக ஊழியர்கள் மற்றும் பெண் ஊழியர்கள் பணி முடியும் நேரத்தில் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கு இடையூறோ, அரசு உடைமைகளுக்கு சேதமோ மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- (T.M. தீன் முகம்மது)
கண்காணிப்பாளர்,
வட்டாரபோக்குவரத்து அலுவலகம்,
மீனம்பாக்கம், ஆலந்தூர்,
சென்னை - 16.

ஒப்பம்/- (N.K வெங்கடாசலபதி)
கணக்கர்,
வட்டாரபோக்குவரத்து அலுவலகம்,
மீனம்பாக்கம், ஆலந்தூர்,
சென்னை - 16.

ஒப்பம்/- (Dr P திருநாவுக்கரசு
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(ESI),
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (ESI),
பெரம்பூர்,
சென்னை - 12

ஒப்பம்/- (K விக்னேஷ்)
அலுவலக உதவியாளர்,
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (ESI),
பெரம்பூர்,
சென்னை - 12.

ஒப்பம்/- IS.ரமேஷ்)
அலுவலக வாகன ஓட்டுநர்,
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (ESI),
பெரம்பூர்,
சென்னை - 12

ஒப்பம்/- (M S அப்துல் ரஹீம்)
பதிவுறு உதவியாளர்,
மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (ESI),
பெரம்பூர்,
சென்னை - 12.

ஒப்பம்/- (P சீனிவாசன்)
Assistant Vice President,
Tablets India Ltd,
தண்டையார்பேட்டை,
சென்னை - 81

ஒப்பம்/- (S சுரேஷ்),
Deputy Divisional Manager,
Tablets India Ltd,
தண்டையார்பேட்டை,
சென்னை - 81.

ஒப்பம்/- (D.தரணி),
Proprietor,
Sn Mahaveer Pharma Distributor,
No.11th அவென்யு,
அசோக்நகர்,
சென்னை-83

ஒப்பம்/- (N.ரவிகுமார்)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16

ஒப்பம்/- (K.S.அனிதா
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- (K யுவராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-15.

முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் ட்ராப் சோதனை / கைப்பற்றுதல் மகஜரின் அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வழக்குகள், சென்னை அவர்களுக்கும் ஏனைய நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

K. YUVARAJ 26/10/2022
Deputy Superintendent of Police
Special Investigation Cell-II
Vigilance and Anti Corruption
Alandur, Chennai - 600 016.